بسم الله الرحمن الرحيم

# THE COMING OF A KHALEEFATHULLAH-II

# கலீஃபத்துல்லாஹ்வின் தோற்றம்-II

**வெள்ளிக்கிழமை குத்து:பா** 29-05-2009

## FRIDAY SERMON

## HAZRAT MUNIR AHMAD AZIM (A)

**“அல்லாஹ் உங்களில் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்கு பிறகு அதற்கு பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்கமாட்டார்கள். அதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுபடாதவர்களாவார்கள்”.** (24:56).

புனித குர்ஆனில் இவ்வசனத்தை **“ஆயத்தே இஸ்திக்லாப்”** என்றழைக்கப்படுகின்றன. இஸ்லாத்தின் கிலாஃபத் அமைப்பைப் பற்றிய குர்ஆன் போதனையின் அடிப்படை இவ்வசனத்தில் காணலாம். கிலாஃபத்துல்லாஹ் அதாவது அல்லாஹ் நேரடியாக நியமிக்கின்ற கலீஃபாக்களும் இவ்வசனத்தின் வரம்பில் வருவார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது வெளிப்பாடுகள் மூலமாக கற்பிக்கும் தத்துவங்களுடையவும் வேண்டுகோளுடையவும் அடிப்படையின்படியே ஒரு கலீஃபத்துல்லாஹ் மக்கள் மத்தியில் தீர்வு எடுப்பது. மக்களின் வீணாசைகள் கலீஃபத்துல்லாஹ்வின் தீர்வுக்கு கட்டுபாடு விதிப்பதில்லை. ஆனால் அல்லாஹ் அவருக்கு தெரியப்படுத்துகின்ற விஷயங்களில் சிலவற்றை பயன்படுத்தி எதிராளிகள் நடத்துகின்ற தீயப்பிரச்சாரங்களுக்கு செவிசாய்த்து கொள்வதிருந்து அல்லாஹ்வின் கலீஃபா கவனமாகயிருக்க வேண்டும்.

**“முஸ்னத் அஹ்மத பின்ஹம்பன்”** வந்துள்ள ஒரு ஹதீஸ் இவ்வாறாகும். நபித்துவத்தை பின்தொடர்ந்து வருகின்ற கிலாஃபத்தின் இரண்டு காலகட்டத்தைக் குறித்த தீர்க்க தரிசனம் உட்படுகின்றது. இந்நபிமொழியில் ஹஸ்ரத் ஹுசைபா(ர) தெரிவிக்கின்றார் நபி(ஸ) அவர்கள் கூறினார்கள்.

**“அல்லாஹ் நாடும் வரை இந்த நுபூவத் இருக்கும். பிறகு அல்லாஹ் அதை எடுத்து கொள்வான். பிறகு நுபூவத்தின் வழியிலான கிலாஃபத் இருக்கும். பிறகு அதை அவன் எடுத்துகொள்வான். அதற்கு பிறகு பலவந்தமான ஆட்சி இருக்கும். பிறகு கொடும்கோல் ஆட்சி இருக்கும். அதற்கு பிறகு நுபூவத்தின் வழியிலான கிலாஃபத் இருக்கும்”.**

இந்த நபிமொழியில் கிலாஃபத்தின் முதல் காலகட்டத்தை, முஸ்லீம்கள் பொதுவாக புரிந்து கொள்வது தூய்மையாளர்களும், நேர்மையாளர்களுமான கலீஃபாக்களின் (கிலாஃபத்தே ராஷித்) காலம் என்றாகும். அவ்வாறே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்திற்கு பிறகு, அஹ்மதியா ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பு உருவானது. ஜமாஅத்தின் கொள்கையை நடத்தி செல்ல கலீஃபத்துல் மஸீஹ்மார்களை தேர்ந்தெடுக்கப்பட்டது. அல்லாஹ் நாடியது வரையிலும் அது நிலை கொண்டது. பிறகு சீரழிவு ஏற்பட்டது. இஸ்லாம் மத

போதனைகளையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பாடங்களையும் தூக்கி வீசினார்கள். திருகுர்ஆனும் திரு சுன்னத்தும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் போதனைகளும் இருக்கும் போதே, அஹ்மதிகள் கிலாஃபத்தை அனைத்திற்கும் மேலே அமைத்தார்கள். குறிப்பாக கிலாஃபத்து தான் எங்களது வாழ்க்கை என்றும் அவர்கள் கூறினார்கள். இந்நிலையையில் அல்லாஹ் அவனது தூய ஒளியை அவர்களிருந்து நீக்கி கொண்டான். இந்த எளியவனை அவனது கலீஃபத்துல்லாஹ்வாக எழுப்பிக்கொண்டான். இந்த எளியவன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவனல்ல. ஹஸ்ரத் முஹமது முஸ்தபா(ஸ) வுடையவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹினுடையவும் பாதையை பின்பற்றி செல்ல அல்லாஹ் அவனது பிரியமானவனாக இந்த எளியவனை தேர்ந்தெடுத்தான். கிலாஃபத்துல்லாஹ்வின் தோற்றம் நிகழ்வது, நபித்துவ போதனைகளின் அடிப்படையில் ஆகும். ஒரு விஷயம் மிக கவனத்திற்குரியதேயாகும். அதாவது மக்களல்ல, அல்லாஹ்வே ஆகும் கலீஃபத்துல்லாஹ்வை தோற்றுவிப்பது. அந்த கலீஃபத்துல்லாஹ்வின் செயல் படைத்தவனிருந்து கிடைக்கும் வேண்டுகோளுக்கு கட்டுபட்டு இருக்கும். அனைத்து உலகையும் படைத்து, அதைக்கட்டிக் காக்கின்ற எல்லாம் வல்ல அல்லாஹ்வில் இருந்து அவருக்கு வெளிப்பாடுகளும் வேண்டுகோள்களும் ஞானவும் கிடைக்கின்றது. அவருக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் வார்த்தைகளை கலீஃபத்துல்லாஹ் தெரியப்படுத்தும் போது, எவர் ஒருவர் அவ்வார்த்தைகளை புறக்கணித்து செல்கின்றானோ அவனை இறுதிநாளில் அல்லாஹ்வின் முன் அழைத்து வரப்படும். அவனது செயல்கள் நியாயமானது என்று கூற ஒரு அத்தாட்சியும் அன்றைய நான் அவனுக்கு கிடைக்காது. ஒரு கலீஃபத்துல்லாஹ்வுக்கு கட்டுபடுதல் எனும் உறுதிமொழி செய்யாமல் மரணத்தை தழுவும் ஒவ்வொரு நபரும் ஜாஹிலீயத்தின் மரணத்திற்கே ஆளாகின்றார்கள்.

இக்காலகட்டத்தில் கலீஃபத்துல்லாஹ்வை ஏற்றுக்கொள்ள வேண்டியது எல்லா முஸ்லீங்களுடையவும் குறிப்பாக மனுகுலத்தினுடையவும் கடமையே ஆகும். மதவிஷயங்களின் உயிர் மூச்சு ஆவார் உண்மையில் கலீஃபத்துல்லாஹ், மார்க்கவிஷய சட்டங்கள் அமல்படுத்த வேண்டியதும் கலீஃபத்துல்லாஹ் வழியாக தான் இவ்விஷயத்தில் சமுதாயத்தின் பண்டிதர்கள் மத்தியில் கருத்து வேற்றுமையில்லை.

தூதுவ அரசன் ஹஸ்ரத் முஹமது நபி(ஸ) வுக்கு பிறகு ஒரு வகையிலுமான நபிமார்கள் இனி தோன்றமாட்டார்கள் என்று மற்று முஸ்லீம் சகோதரர்களும் அவர்களின் உலமாக்களும் எண்ணுகின்றன. அவர்களைப் பொறுத்த வரையில் நபித்துவத்தின் வாசல் அடைந்து போயிருக்கின்றது. உண்மையில் நபித்துவத்தின் அருள்கள் நஷ்டமாகி போகின்ற காரணத்தால் நிகழுகின்ற மோசவும் நெறிகேடுமான விளைவுகள் மக்களை சீர்கேட்டின் பாதையில் ஈர்த்துசெல்கின்றன. அது மூலமாக உருவாகின்ற சமூககேடுகளைக் குறித்து இந்த முல்லாக்கள் புரிந்து கொள்ளவில்லை. இக்காலகட்டத்தில் ஒரு கலீஃபத்துல்லாஹ்வின் தோற்றம் இஸ்லாத்தின் மிகபெரிய கடமைகளில் ஒன்றே ஆகும். உண்மையில் ஒரு கலீஃபத்துல்லாஹ்வின் வருகை வழியல்லாமல் பாரினில் உண்மையான இஸ்லாமை அமைக்க ஒரு பொழுதும் இயலாது என்பதேயாகும்.

மற்று முஸ்லீம் பிரிவினர்கள் - சுன்னிகள், ஷியாக்கள் மற்றும் முஸ்லீம் சமுதாய அமைப்புகள் அனைவரும் கிலாஃபத்தைக் குறித்து வேறுமையான கருத்துகளோடும் சிந்தனைகளோடும் வாழுகின்றோர்கள் ஆவார்கள். ஒவ்வொரு முஸ்லீம் பிரிவினோர்களுக்கும் ஒவ்வொரு கலீஃபா உருவானால் அது சமூகத்தில் பெரிய ''பித்னா'' வுக்கு வழிவகுக்கும். கலீஃபத்துல்லாஹ் என்ற நிலையில் எனது நோக்கத்தில் முஸ்லீம்களுக்கு ஒரே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டதோ அல்லது நியமிக்கப்பட்டதோ ஆன இரண்டு கலீஃபாக்கள் இருப்பது தடைசெய்யப்பட்டிருக்கின்றது. ஏனெனில், அவர்களின் மார்க்க விஷயங்களிலும் எண்ணங்களிலும் முரன்பாடுகள் உருவாகும். அது வழி சமுதாயத்தில் ஒற்றுமை சிதறடிக்கப்படும். அவர்களிடத்தில் குழப்பவும், தற்கவும் தோன்றும். திரு ஷரியத்தும், திரு சுன்னத்தும் தூக்கிவீசப்படும். பித்அத்துகளும், பித்தினாக்களும் சமூகத்தில் பரவும். இவையாவும் எவருடையவும் விருப்பத்திற்கு ஏற்றதல்ல.

ஆகையால் நமக்கு அஹ்மதியா ஜமா அத்தின் நிறுவினரான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மது (அ) மின் போதனைகளின் பால் திரும்ப செய்வோம். ஹஸ்ரத்து அஹ்மது (அ) அவர்கள் **''குத்ரத்தே சானியா''** வை பற்றி நமக்கு விளக்கம் அளித்தார். குத்ரத்தே சானியா அதாவது இரண்டாம் வல்லமை என்றால் என்ன?

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது(அ) அவர்கள் **''அல்-வஸியத்து''** என்ற நூல் இறையருளும் இறை உதவியும் தனது சமுதாயத்தின் மீது இறங்கும் என்றும் தெரிவித்திருந்தார். அவர் வாழ்ந்திருந்த காலயளவில் இறையருள்களுடையவும், சக்திகளுடையவும் உதவி வெளிப்பட்டது. அதைப்போன்றே அவர்களின் காலத்திற்கு பிறகும் அஹ்மதியா ஜமா அத்தின் மீது இறை சக்தியுடையவும் இறை உதவியுடையவும் இரண்டாம் வல்லமை தோன்றும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். ஆனால் இந்த இரண்டாம் வல்லமையை அஹ்மதி சகோதரர்கள் தங்களின் கிலாஃபத் அமைப்போடு இணைத்து விளக்குகின்றார்கள்.

அதற்கு எனது பதில் இவ்வாறாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அ) மின் வருகையின் நோக்கம், ஹஸ்ரத் முஹமது (ஸ) வின் போதனைகளின்பால் மக்களை வழிநடத்தி செல்லவும், முஸ்லீம் பண்டிதர்களும் உலமாக்களும் காற்றில் பறத்திய இஸ்லாமின் தூய போதனைகளை திரும்பபெற செய்யவும் ஆகும். இச்செயல் முழுமைபெற செய்யவே இறை சக்தியின் பிரகடனம் உருவாவது. புனித குர்ஆன் கூறுகின்றது.

**''இன்றையநாள் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன்''.** (5-4) நபி அரசன் முஹமது(ஸ) வின் காலகட்டத்திலேயே இறைசக்தியுடையவும் இறை உதவியுடையவும் பிரகடனம் தோற்றியது. ஆனால் திருநபி(ஸ)வின் காலத்திற்கு பிறகும் **''குலபா உராஷித்தீன்''** என்ற பெயரில் அறிகின்ற நேர்மையாளர்களான கலீஃபாக்கள் வழியும் மார்க்க சீர்திருத்தாளர்களான முஜத்தீதுகள் வழியும் இறையருள் தொடர்ந்து வந்தது. அவர்களெல்லாம் இறை சக்தியின் இரண்டாம் வல்லமையில் உட்படுவார்கள். அந்த இரண்டாம் வல்லமையை ஏதாவது ஒரு குறிப்பாணை தரத்தின்பால் ஒதுக்கிட முடியாது. ஆற்றல் இழந்து போகின்ற சமுதாயத்தை பலப்படுத்துவதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது இரண்டாம் வல்லமையை வெளிப்படுத்துகின்றான்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அ) அவர்களின் காலத்திற்கு பிறகு அஹ்மதியா ஜமா அத்தில் தோன்றிய கலீஃபாக்கள் எல்லாம் இறை உதவியின் இரண்டாம் வல்லமையை வெளிப்படுத்தியிருந்தவர்கள் என்று கூறுவதில் நிஜமில்லை. இரண்டாம் வல்லமை என்றால் உண்மையின் வழியிலான இறை உதவி என்று பொதுவாக கூறலாம். ஆகவே, **''குத்ரத்தே சானியா''** என்பதனால் பொருளாக்குவது ஜமா அத்தின் மீது இறங்குகின்ற பல தரப்பட்ட இறை உதவியே ஆகும்.

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்றூர் அஹ்மது சாஹிப்பிடவும் மற்று அஹ்மதியா சகோதரர்களிடவும் எனது ஒரு கேள்வி.

**தூதுவ மன்னன் முஹ்மது (ஸ) வின் காலத்திற்கு பிறகு இஸ்லாமில் தோன்றிய இரண்டாம் வல்லமை இன்று வரையிலும் வெளிப்பட்டுக்கொண்டே இருக்கின்றது என்றும், அது என்றென்றும் நீடித்துகொண்டே இருக்கும் என்றும் நீங்கள் நம்புகின்றீர்களா? இல்லை, வாக்களிக்கப்பட்ட மஸீஹ்க்கு பிறகு புதிதாக ஒரு இரண்டாம் வல்லமை, முதல் வல்லமைக்கு பதிலாக வந்து சேர்ந்துவிட்டது என்று நீங்கள் நம்புகின்றீர்களா? இதுவே எனது கேள்வி இதற்கு அவர்களிடத்திருந்து உடனடியாக பதில் கிடைக்கும் என்று நான் எண்ணுகின்றேன்.** இன்ஷா அல்லாஹ்.

ஆகவே, கலீஃபத்துல்லாஹ் என்றால் என்ன? ஏதாவது ஒரு பிரிவினரை சார்ந்த மக்களால் தேர்ந்தெடுக்க கூடிய ஒரு நபரல்ல கலீஃபத்துல்லாஹ். மாறாக அவர் அல்லாஹ்வே நேரடியாக நியமிக்கின்ற கலீஃபா ஆவார். அல்லாஹ்வின் கலீஃபாவை அல்லாஹ்வே தேர்ந்தெடுக்கின்றான். கலீஃபத்துல்லாஹ் என்றால் அல்லாஹ்வின் பிரதிநிதி ஆவார். இஸ்லாமிக நோக்கத்தின் அடிப்படையில் கூறினால், கலீஃபத்துல்லாஹ் அல்லாஹ்விடமிருந்தே தோன்றுகின்றர். மானிடகுலத்தை அவர்களின் படைத்தவனிடத்தில் இணைத்திடவும், மக்களின் ஆன்மீகவும் பௌதீகவுமான செழிப்பிற்கு வழிவகுத்திடவுமாக அல்லாஹ் அவனது பிரதிநிதியாக கலீஃபத்துல்லாஹ்வை அனுப்பி வைக்கின்றான். அல்லாஹ்விடமிருந்து அனுதினம் கிடைக்கும் ஞானவும் உதவியும் மூலம் குர் ஆன் கட்டளைகளுக்கும் திரு நபி (ஸ) வின் போதனைகளுக்கும் ஏற்றவார் அவர் பிரதிநிதியாத விளங்குவார். கலீஃபத்துல்லாஹ் இறையதிகாரம் பயன்படுத்த வேண்டும். அவர் முழுமையாக ஒரு சுய ஆட்சி முறை கடைப்பிடிக்கும் நபரேயன்றி பாரினில் இறை அதிகாரத்தின் மனித பிரதிநிதி கூட ஆவார். இறைவேண்டுகோள்கள் வழியாகவும் சமாதானமான அரசியல் நடபடிக்கை முறை வழியாகவும், முஸ்லீம் நாடுகளுக்கிடையில் ஒற்றுமை ஊட்டி வளர்ப்பதும் கலீஃபத்துல்லாஹ்வின் கடமையாகும்.

அல்லாஹ்வின் அருளால் நீங்கள் அனைவரும் இந்த சொற்பொழிவை அழகாக புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அருள்புரிவானாக. இக்காலகட்டத்தின் உண்மை செய்தியை ஏற்றுக்கொள்ள அல்லாஹ் அருள் செய்வானாகா. ஆமீன்.

Issued by R. Jamaludin Raother, Amir (South Zone)
Jamaat UI-SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com
**Phone: 09447001832**

**Translated by**
**Azim Ahmad**
**Kerala / Tamil Nadu**
**09789180817**